தினமணி

**குடைமிளகாய் பயிரில் பூச்சிகளை கட்டுப்படுத்தும் கோமியம்!**

First Published : 07 Oct 2010 01:55:58 PM IST

கிருஷ்ணகிரி, அக். 6: குடைமிளகாய் (கேப்சிகம்) பயிரில் கோமியம் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தும் வழி முறை குறித்து ஒசூர் விவசாயி வெங்கடேஷ் யோசனை தெரிவித்துள்ளார்.

ஓசூர் பகுதியில் விவசாயிகள் பசுமைக்குடில்கள் அமைத்து குடைமிளகாய் சாகுபடி செய்து அதிக வருவாய் ஈட்டி வருகின்றனர்.

குடைமிளகாய் பயிரில் நட்ட 65-வது நாள் காய்கள் தோன்றும். இக் காலகட்டத்தில் பூச்சித் தாக்குதலும் அதிகம் இருக்கும். இதைக் கட்டுப்படுத்த, சொட்டுநீர் பாசனம் செய்யும்போது, 10 லிட்டர் தண்ணீருக்கு 2 லிட்டர் கோமியம் என்ற அளவில் கலந்து பயிர்களுக்கு செலுத்த வேண்டும்.

அவ்வாறு ஒரு மாதத்துக்கு 6 முறை செலுத்தி வந்தால் நோய்த் தாக்குதல் கட்டுப்படுத்தப்படும்.

கோமியம் பயன்படுத்தப்படுவதால் பயிர் நல்ல ஆரோக்கியத்துடன் காணப்படும். காய்களும் தரமானதாக இருக்கும். இதனால் காய்களுக்குக் கூடுதல் விலை கிடைக்கிறது. பராமரிப்புச் செலவும் குறைகிறது என்கிறார் வெங்கடேஷ்.

**மின்மோட்டார்: விவசாயிகள் கோரிக்கை**

First Published : 07 Oct 2010 11:10:07 AM IST

காஞ்சிபுரம், அக். 6: விவசாயிகள் தங்கள் கிணற்றில் பொருத்தியுள்ள மின் மோட்டருக்கு தகுந்த மின்மோட்டாரையே தமிழக அரசு வழங்க வேண்டும் என்று அனைத்து விவசாய சாகுபடி பயிர்கள் உற்பத்தி மற்றும் விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

÷இச் சங்கத்தின் முதலாம் ஆண்டு விழா புதன்கிழமை நடைபெற்றது. மாவட்டத் தலைவர் மு.திருவேங்கிடம் தலைமை தாங்கினார். காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் பெ.விஸ்வநாதன் விழா மலரை வெளியிட்டார்.

÷இக் கூட்டத்தில், தமிழக அரசின் இலவச மின் மோட்டார் வழங்கும் திட்டத்துக்கு வரவேற்பு தெரிவிக்கப்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் பல்வேறு இடங்களில் கிணற்றில் குறைந்துள்ளது.

÷இதனால் விவசாயிகள் கூடுதல் குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டாரை கிணறுகளில் பொருத்தியுள்ளனர். தமிழக அரசு இலவச மின் மோட்டார் வழங்கும்போது அது விவசாயிகளின் கிணற்றில் உள்ள தண்ணீரை எடுக்கும் அளவுக்கு அவர்கள் பொருத்தியுள்ள குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்களுக்கு தகுந்தாற்போல் வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

÷விவசாயிகள் 50 சதவீதம் தொகை செலுத்தினால், அரசு 50 சதவீதம் தொகை அளிக்கும். அதன் மூலம் விவசாய வேலைகளுக்கு தேவையான இயந்திரங்களை வாங்கி வைத்துக் கொண்டு அதை விவசாய சங்கங்கள் பராமரித்து பயன்படுத்திக் கொள்ளலாம் என்று மாவட்ட நிர்வாகம் ஏற்கெனவே கூறியுள்ளது.

÷விவசாய இயந்திரங்களுக்கான பாதி தொகையை நாங்கள் விவசாயிகளிடம் வசூலித்து செலுத்த தயாராக உள்ளோம். அத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் வலியுறுத்தினர்.

÷செயல் தலைவர் அமர்நாத், தலைமை நிலைய செயலர் பரசுராமன், மாவட்டச் செயலர் மு.சடகோபன், மகளிர் பிரிவு அ.குப்பம்மாள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## 1.20 லட்சத்துக்கு வாழைத்தார் ஏலம்

First Published : 07 Oct 2010 11:34:53 AM IST

நாமக்கல், அக். 6: நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமை நடந்த ஏலத்தில் வாழைத்தார் | 1.20 லட்சத்துக்கு போனது.

ஒருவந்தூரில் வாரந்தோறும் புதன்கிழமை வாழைத்தார் ஏலம் நடத்தப்படுகிறது. மோகனூர், ஒருவந்தூர், பாலப்பட்டி, பரமத்தி வேலூர், பொத்தனூர், நன்செய் இடையாறு பகுதி விவசாயிகள் வாழைத்தாரை ஏலத்துக்குக் கொண்டு வருகின்றனர். புதன்கிழமை

நடந்த ஏலத்தில் வாழைத்தார் அதிகபட்சமாக | 260-க்குப் போனது. 1100 வாழைத்தார்கள் | 1.20 லட்சத்துக்கு ஏலம் போனது.

ஏலம் முடிந்தவுடனேயே விவசாயிகளுக்கு கூட்டுறவு விற்பனைச் சங்கம் மூலம் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது.

பெண்ணிடம் நகை பறிப்பு

நாமக்கல், அக். 6: நாமக்கல்லில் ரேஷன் கடைக்கு நடந்து சென்ற பெண்ணிடம் 7 பவுன் தங்கச் சங்கிலி பறிக்கப்பட்டது.

நாமக்கல் அழகுநகரில் வசிப்பவர் பாலசுப்ரமணியம். பிஎஸ்என்எல் நிறுவன விற்பனை பிரிவு மேலாளர்.

இவரது மனைவி நீலா (53).

செவ்வாய்க்கிழமை காலை வீட்டுக்கு அருகே ரேஷன் கடைக்கு பொருட்கள் வாங்கச் சென்றார். அப்போது, அவ் வழியாக மோட்டார் சைக்கிளில் வந்த மர்ம நபர்கள் இருவர் நீலாவை மிரட்டி அவர் அணிந்திருந்த 7 பவுன் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றனர்.

நாமக்கல் போலீஸôர் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தினமலர்

**மாவுப் பூச்சியை அழிக்க புது திட்டம்: வேளாண் பல்கலை அறிமுகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:13 IST

கோவை: மாவுப் பூச்சிகளை அழிக்கும் புதிய திட்டத்தை கோவை வேளாண் பல்கலை அறிமுகம் செய்துள்ளது. பப்பாளி, மரவள்ளி மற்றும் காய்கறிகளை தாக்கும் மாவுப் பூச்சிகளை ஒட்டுண்ணிகள் மூலம் அழிக்கும் திட்டத்தை, கோவை வேளாண் பல்கலையில் நேற்று மாநில வேளாண்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைத்தார்.




கோவை தமிழ்நாடு வேளாண் பலகலை சார்பில் 'மாவுப் பூச்சி கட்டுப்பாடு' திட்டத் துவக்க விழா நேற்று நடந்தது. வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் துவக்கி வைத்தார். அருகில் எம்.பி.,ராமலிங்கம், வேளாண் உற்பத்தி ஆணையர் ராம மோகன ராவ், பல்கலைக்கழக துணை வேந்தர் முருகேச பூபதி உள்பட பலர் உள்ளனர்.

விழாவில் வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: தமிழகத்தில் பப்பாளி மாவுப்பூச்சி தாக்குதல் முதன் முதலில் கோவையில் 2008 ஜூலையில் கண்டறியப்பட்டது. பப்பாளி தவிர, மல்பரி, மரவள்ளி, காய்கறிப் பயிர்கள், காட்டாமணக்கு, பருத்தி மலைத் தோட்டப் பயிர்கள், மலர்களில் பரவி சேதம் ஏற்படுத்தி வருகிறது. சிகப்பு, கறுப்பு எறும்புகளின் நடமாட்டம், மஞ்சள் நிற, காய்ந்த, வளைந்து நெளிந்த வளர்ச்சி குன்றிய குருத்துகள், இலை மற்றும் இதர பாகங்களில் தென்படும் பளபளப்பான ஒட்டும் தன்மை கொண்ட தேன் போன்ற திரவம், இலைகள் மஞ்சள் நிறமாகுதல் போன்ற அறிகுறிகள் மூலம் நோயை கண்டறியலாம். மொத்தம் 55 வகை பயிர்களில் தாக்குதல் ஏற்படுத்துவதாக கண்டறியப்பட்டுள்ளது. கோடையில் நிலவும் மிக அதிகமான வெப்பநிலை, இதன் இனப் பெருக்கத்துக்கு மிகவும் சாதகமாக அமைகிறது. மாவுப் பூச்சிகளை ரசாயன மருந்துகளால் கட்டுப்படுத்தும் முயற்சி பயன் அளிக்கவில்லை. ஒட்டுண்ணிகளை பயன்படுத்தி கட்டுப்படுத்தும் திட்டம், இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக பூச்சிகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அமெரிக்காவில் இருந்து தருவிக்கப்பட்ட இந்த ஒட்டுண்ணிகள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சிலின் உதவியுடன் பெங்களூரில் இருந்து கோவை வேளாண் பல்கலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இங்கு ஒட்டுண்ணிகளை பெருக்கும் பணியில்

ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். பல்கலையின் கீழ் இயங்கும் வேளாண் கல்வி மையங்கள், ஆராய்ச்சி மையங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு ஒட்டுண்ணிகள் வழங்கப்படும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். தமிழக தோட்டக்கலை இயக்குனர் சந்திரமோகன், வேளாண் கமிஷனர் கோசலராமன், வேளாண் ஆராய்ச்சியாளர் ரபீந்திரா உட்பட பலர் பங்கேற்றனர்.

**தொடர் மழையால் தேயிலை உற்பத்தி பாதிப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:06 IST

வால்பாறை: வால்பாறையில் தொடர்ந்து மழை பெய்வதால் தேயிலை உற்பத்தி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. வால்பாறையில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் சோலையாறு அணையின் நீர்மட்டம், தொகுப்பு அணைகளான மேல்நீராறு, கீழ்நீராறு, அப்பர்ஆழியாறு மற்றும் காடம்பாறை அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. தோட்ட அதிகாரிகள் கூறியதாவது: வால்பாறையை சுற்றியுள்ள எஸ்டேட் பகுதிகளில் மழை பெய்துவருவதால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கத்தரிவெட்டு மூலம் தேயிலை பறிக்கும் காடுகளில் 22 நாட்களுக்கு பிறகும், கையால் தேயிலை பறிக்கும் காடுகளில் 8 நாட்களுக்கு பிறகும், மிஷின் மூலம் தேயிலை பறிக்கும் காடுகளில் 30 நாட்களுக்கு பிறகு தான் தேயிலை செடிகள் துளிர்விடத்துவங்கும். வால்பாறையில் தற்போது தொழிலாளர்கள் பற்றாக்குறையால் பெரும்பாலான காடுகளில் கத்தரி மூலம் தேயிலை பறிக்கப்படுகிறது. பறித்த தேயிலையில் கரட்டு இலை நீங்கிவிட்டு, நல்ல இலையை மட்டும் தேயிலை தூள் தயாரிக்க பேக்டரிக்கு அனுப்படுகிறது என்றனர்.

சோலையாறில் மூன்று அடி உயர்வு: வால்பாறையில் நேற்று முன் தினம் இரவு விடிய, விடிய கன மழை பெய்ததால் அணைகளின் நீர்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. 160 அடி கொள்ளவு கொண்ட சோலையாறு அணையின் நீர்மட்டம் நேற்று காலை 153.20 அடியாக உயர்ந்தது. கடந்த மூன்று நாளில் அணையின் நீர்மட்டம் 3 அடி உயர்ந்துள்ளது. அணைக்குவிநாடிக்கு 972 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையிலிருந்து மானாம்பள்ளி பவர் ஹவுஸ் வழியாக பரம்பிக்குளத்திற்கு 811 கன அடி

தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. வால்பாறையில் நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு: (மில்லி மீட்டரில்) வால்பாறை- 17, சோலையாறு-5, மேல்நீராறு-41, கீழ்நீராறு-45 மழை பெய்துள்ளது.

**வரத்து குறைந்ததால் எலுமிச்சை விலை "கிடுகிடு' உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:04 IST

பொள்ளாச்சி: தொடர் மழையால் வெளிமாவட்டங்களிலிருந்து பொள்ளாச்சி சந்தைக்கு எலுமிச்சை வரத்து குறைந்து,விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. பொள்ளாச்சி காந்தி வாரச்சந்தைக்கு சுற்றுப்பகுதி கிராமங்கள் மற்றும் திண்டுக்கல், கோவில்பட்டி, பழநி, ஒட்டன்சத்திரம், திருச்சி உட்பட பகுதிகளிலிருந்து எலுமிச்சை வரத்து உள்ளது. சந்தைக்கு வரும் எலுமிச்சை கேரளா, வால்பாறை போன்ற பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. சீசன் சமயங்களில் பொள்ளாச்சி சந்தைக்கு சாதா மற்றும் வீரிய ரக எலுமிச்சை 1,500 கிலோ வரை வரத்து இருக்கும். மாநிலம் முழுவதும் பரவலாக பெய்த மழை காரணமாக விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், கடந்த சில நாட்களாக சந்தைக்கு எலுமிச்சை வரத்து பல மடங்கு குறைந்துள்ளது.
வரத்து குறைவால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சாதாரண ரக எலுமிச்சை விலை கிலோ 20 ரூபாயாகவும், வீரிய ரக எலுமிச்சை 70 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளது. சில்லறை விற்பனையில் 2 ரூபாய் முதல் 5 ரூபாய் விற்கப்படுகிறது. தற்போது, சந்தைக்கு 300 கிலோவிலிருந்து 700 கிலோ வரை மட்டுமே வரத்து உள்ளது. வெளிமாவட்ட வரத்து சீராகும் வரை சந்தையில் எலுமிச்சை விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருக்கும் வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தோட்டக்கலைத்துறையில் மானிய விதைகள் இல்லை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,22:49 IST

திருப்பூர்: மானியம் அறிவிக்கப்பட்ட விதை மற்றும் உரம் தோட்டக்கலைத்துறை அலுவலகங்களுக்கு இன்னும் வந்து சேரவில்லை. திருப்பூர் மாவட்டத்தில் பரவலாக மழை

பெய்துள்ளது. விதைப்பு பணிகளில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். சோளம், மக்காச் சோளம், எண்ணெய் வித்து என வேளாண் பயிர் தவிர, தக்காளி, வெண்டை, கத்தரி உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யவும் நிலங்களை தயார் செய்து வருகின்றனர். ஆனால், மானியத்தில் வழங்கப்படும் விதை, உரங்கள் தோட்டக்கலைத்துறை அலுவலகத் துக்கு குறைந்தளவில் வந்துள்ளன. உரிய நேரத்தில் விதை மற்றும் உரங்கள் கிடைக்குமா என்ற அச்சம் விவசாயிகளிடம் ஏற்பட்டுள்ளது. வரும் நாட்களில் நல்ல மழை கிடைக்க வாய்ப்புள்ளது; பயிர் செய்யப்படும் பயிர்களுக்கு, தண்ணீர் தேவை குறைவு. இக்கால கட்டத்தில் விவசாயிகளின் முழுமையான விளைநிலமும் பயிரிடப்படும் காலம் இது. மானியம் அறிவிக்கப்பட்டு இரண்டு மாதங்களாகியும், தோட்டக்கலைத்துறை அலுவலகத்துக்கு மானிய பொருட்கள் வந்து சேரவில்லை. நீர்வள நிலவள திட்டம் மற்றும் தேசிய தோட்டக்கலை திட்டங்களில் மானியம் வழங்கப் படுகிறது. திருப்பூர் வட்டார அலுவலகத்துக்கு விதையில் வெண்டை மற்றும் உரத்தில் பொட்டாசியம் நைரேட் வந்துள்ளது. தக்காளி, வெங்காயம், பீட்ரூட், வாழைக்கன்று உள் ளிட்ட பயிர்களுக்கு, இயற்கை உரம், அசோஸ் பயிரில்லம், பாஸ்போ பாக்டீரியம் உள்ளிட்ட உரங்கள் வரவில்லை.  தேவையான விதை மற் றும் உரத்துக்கு விவசாயிகள் பதிவு செய்து காத் திருக்கின்றனர். உரிய நேரத்தில் தேவையான இடுபொருட்களை தோட்டக்கலைத்துறை வழங்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இக்னேஷியஸ் ரோச் கூறுகையில், ""மானியம் அறிவிக்கப்பட்ட விதை, உரம் விரைவில் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விதைப்புக்கு தேவையான பொருட்கள் வழங்கப்படும்," என்றார்.

**தக்காளி விலை திடீரென வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,22:58 IST

திருப்பூர்: மழை காரணமாக வியாபாரிகள் கொள்முதலை குறைத்துக் கொண்டதால், தக்காளி விலை திடீரென வீழ்ச்சி அடைந்துள்ளது. உழவர் சந்தைகள், தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டுக்கு தினமும் ஆயிரம் விவசாயிகள் வரை தக்காளியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். உழவர் சந்தைக்கு இணையாக தென்னம்பாளையத்தில் விற்பனை நடக்கிறது.  மழை காரணமாக தக்காளி அதிக நாட்களுக்கு தாங்காது; அழுகல் ஏற்படும். இதன் காரணமாக, அன்றாட தேவைக்கேற்ப

வியாபாரிகள் வாங்கிக்கொள்கின்றனர். கடந்த வாரத்தில், ஐந்து கிலோ கூடை 75 ரூபாய் வரை விற்றது; கடந்த இரண்டு நாட்களுக்கு முன், 50 ரூபாய் வரை விற்றது. நேற்று கூடை 30 ரூபாய் முதல் 35 ரூபாய் வரை விற்பனையானது. வெளியூர் வியாபாரிகள் கொள்முதலை குறைத்ததால், விலையில் திடீரென வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

**மலை காய்கறிக்கு விலையில்லை: சிறு விவசாயிகளுக்கு கவலை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 07,2010,22:36 IST

கோத்தகிரி: கோத்தகிரி சுற்றுவட்டாரத்தில் விளையும் மலை காய்கறிகளுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் விரக்தியில் உள்ளனர். நீலகிரியில் கடந்த சில நாளாக தொடர் மழை பெய்து வருகிறது. குறிப்பாக, இரவு நேரத்தில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்கிறது. குன்னூர், கோத்தகிரி உட்பட பகுதிகளில் ஆங்காங்கே சிறிய அளவிலான மண் சரிவு, மரங்கள் விழுவது போன்றவை தொடர்கின்றன. இந்த மழை தேயிலை தோட்டம், மலை காய்கறி தோட்டங்களுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. தோட்டங்களில் உள்ள நிலங்களில் நிலவும் ஈரப்பதத்தால், விவசாயிகள் உரமிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர். கோத்தகிரி வட்டாரத்தில் நீராதாரம் நிறைந்த பகுதிகளான மிளிதேன், நெடுகுளா, வ.உ.சி., நகர், கேர்கம்பை, சுள்ளிகூடு மற்றும் கூக்கல் தொரையில் மலை காய்கறிகளான காரட், முட்டை கோஸ், உருளை கிழங்கு, பீட்ரூட், பீன்ஸ் உட்பட பல காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. ஆனால்,காரட் உள்ளிட்ட காய்கறிக்கு போதிய விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலையடைந்தனர்.

**பயறு வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:58 IST

தேனி : மாவட்டம் முழுவதும் நல்ல மழை பெய்து வந்தாலும் பயறு வகைகளை சாகுபடி செய்ய விவசாயிகள் தொடர்ந்து தயக்கம் காட்டி வருகின்றனர்.

தேனி மாவட்டம் முழுவதும் கடந்த ஒருவாரமாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மானாவாரி நிலங்களில் விதைப்பு பணிகள் மும்முரமாக நடந்து வருகின்றன.

பெரும்பாலான விவசாயிகள் மக்காச்சோளம், கம்பு, சோளம் போன்றவற்றையே சாகுபடி செய்கின்றனர். உளுந்து, பாசிப்பயறு, துவரை போன்ற பயறு வகைகளை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை. இவற்றினை சாகுபடி செய்ய விவசாயத்துறை அதிகளவு மானிய உதவிகளை வழங்கினாலும் விவசாயிகளிடையே தயக்கம் நிலவுகிறது.

இது பற்றி விவசாயிகள் கூறியதாவது: கம்பு, சோளம், மக்காச்சோளம் போன்றவற்றை இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்யலாம். மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான தொழிலாளர்களே தேவைப்படுவார்கள். ஆனால் பயறு வகை அறுவடை முழுக்க தொழிலாளர்கள் மூலமே செய்ய முடியும். தற்போதைய ஆள் பற்றாக்குறையில் தொழிலாளர்கள் கிடைப்பது அரிதாக உள்ளது. எனவே செலவு அதிகரிக்கும். வேலைப்பளுவும் கூடி விடும். அந்த அளவுக்கு பயறு வகைகளில் வருவாயும் இல்லை என்றனர்

**ஆடுகளுக்கு நீலநாக்கு நோய் அபாயம் : முன் எச்சரிக்கை அவசியம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,01:17 IST

காரைக்குடி : மழையை தொடர்ந்து ஆடுகளை தாக்கும் "நீலநாக்கு' நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. முன் எச்சரிக்கையாக தடுப்பூசி போட்டால் மட்டுமே, ஆடுகளை காப்பாற்ற முடியும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.
பருவமழை துவங்கி விட்டதால், கால்நடைகளுக்கு பல வித தொற்று நோய்கள் ஏற்படும். இதில், ஆடுகளுக்கு பரவும் நீலநாக்கு நோய் (ப்ளூடங்க்) முக்கியமானது. அறிகுறி: இந்நோய் "கூலிகாய்ட்ஸ்' எனப்படும் பூச்சிகளால் ஏற்படும் ஒரு வகை நச்சு உயிரி. இப்பூச்சிகள், நோய் கண்ட ஆடுகளை கடித்து விட்டு. மற்ற ஆடுகளின் மீது அமரும் போது நோய் எளிதாக பரவும். நோய் கண்ட ஆடுகளுக்கு 105 முதல் 107 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் இருக்கும். மூக்கில் திரவம் ஒழுகும். சுவாசிக்க சிரமப்படும். வாயின் உட்பகுதி, ஈறுகள், நாக்கு, மூக்கின் உட்பகுதியில் புண்கள் காணப்படும். நாக்கு வீங்கி நீல நிறமாகும். நோய் முற்றிய நிலையில் நாக்கு ரத்த ஓட்டம் இன்றி நீல நிறமாக இருக்கும். கால் குளம்புகளில் மேல் பகுதி சிவந்து புண்கள் ஏற்படும். கழுத்து பகுதி பாதிக்கப்படுவதால் ஒரு பக்கமாக இழுத்து கொண்டு நடக்கும். ரோமங்களுக்காக வளர்க்கப்படும் செம்மறி ஆடுகளில் முடி கொத்து கொத்தாக கொட்டும். அடிக்கடி வயிற்று போக்கு ஏற்படும். சில நாட்களில் இறந்து விடும்.

**தடுப்பு முறை:** நோய் கண்ட ஆடுகளை மேய்ச்சலுக்கு அனுப்பாமல் தனியாக பாரமரிக்க வேண்டும். அரிசி, கம்பு, கேழ்வரகை கஞ்சியாக்கி கொடுக்க வேண்டும். புண்ணை பொட்டாசியம் பெர்மாங்கனேட் அல்லது சாதாரண உப்பு கரைசல் கொண்டு, தினமும் மூன்று முறை கழுவ வேண்டும். 100 மி., கிளிசரினில் 10 கிராம் "போரிக் ஆசிட்' பவுடரை கலக்கி வாயில் உள்ள புண்களில் தடவ வேண்டும். கொசுவர்த்திகள் அல்லது விளக்கு பொறி வைக்கலாம். எண்ணெய் தடவிய காகிதங்களை தொங்கவிட்டால் பூச்சிகள், ஆடுகளை கடிக்காது.

இதுகுறித்து குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் தங்கதுரை கூறுகையில், ""மழையால் குளங்களில் தண்ணீர் தேங்கியுள்ளது. இந்த தண்ணீரை குடிப்பதால் செம்மறி ஆடுகளுக்கு நீலநாக்கு நோய் ஏற்படும் வாய்ப்பு உள்ளது. அக்டோபர் முதல் டிசம்பர் வரை முன் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இந்நோய்க்கு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை, தடுப்பூசி உருவாக்கியுள்ளது. பருவமழை முன் அல்லது பின்னர் ஊசி போட்டு ஆடுகளுக்கு நோய் தாக்காமல் தடுக்கலாம்," என்றார்.

**வனத்தையும், வன உயிரினத்தையும் பாதுகாக்க மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,04:16 IST

திருநெல்வேலி:வனத்தையும், வன உயிரினங்களையும் பாதுகாப்பது குறித்து மக்களி டையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என பாளை.யில் நடந்த வன உயிரின வார விழாவில் சபாநாயகர் ஆவுடையப்பன் தெரிவித்தார்.பாளை.சாராள் தக்கர் கல்லூரி வளாகத்தில் வன உயிரின வார விழா நடந்தது. விழாவில் மாவட்ட வன அலுவலர் அம்புரோஸ் வரவேற்றார். நெல்லை கலெக்டர் ஜெயராமன், மேயர் ஏ.எல்.சுப்பிரமணியன், களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பக தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர் மல்லேசப்பா முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சபாநாயகர் ஆவுடையப்பன் தலைமை வகித்து பேசியதாவது; வனத்தை பாதுகாப்பது வருங்கால சமுதாயத்தை பாதுகாப்பதற்கு சமமாகும். வனத்தை பாதுகாக்க நிகழ்ச்சி நடத்தப்படுவது பாராட்டுக்குறியதாகும். நெல்லை மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையில் ஏராளமான வன விலங்குகளும், புலிகள் காப்பகமும் உள்ளது.

வனத்தை பாதுகாக்க வலியுறுத்தி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆங்காங்கே விழிப்புணர்வு பலகைகள் வைக்கப்பட்டுள்ளது. வனத்தையும், வன உயிரினத்தையும் பாதுகாப்பது குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.கென்யா தலைநகர் நைரோபியில் வன விலங்குகள் பாதுகாப்பிற்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அங்குள்ள மக்கள் வனவிலங்கை பாதுகாக்க மக்கள் உணர்வோடு செயல்படுகின்றனர். இதனால் அங்கு மக்களை கண்டு பயப்படாமல் வன விலங்குகள் சகஜமாக உலா வருகின்றன. இந்த நிலை இந்தியாவிலும், தமிழகத்திலும் வரவேண்டும். காடுகளின் அவசியத்தை மக்களுக்கு உணர்த்த திறந்த வெளியில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை வனத்துறையினர் நடத்த முன் வரவேண்டும்.இவ்வாறு சபாநாயகர் ஆவுடையப்பன் பேசினார்.நிகழ்ச்சியில் வேளாண் விற்பனைக்குழு தலைவர் கணேசன், சாராள் தக்கர் கல்லூரி முதல்வர் ஜாஸ்மின் மதியழகன், கல்லூரி விலங்கியல் பிரிவு ஜூலியட் வனிதா ராணி உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

இதனையடுத்து பஞ்சாப்பில் நடந்த தேசிய விளையாட்டு போட்டியில் 52 கிலோ வெயிட் லிப்டிங் போட்டியில் வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கம் வென்ற டிரைவர் முருகன் மற்றும் வனத்துறை சார்பில் நடந்த பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் முக்கிய பிரமுகர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர். நெல்லை வனச்சரகர் சாமுவேல் ராஜ்குமார் கங்கா நன்றி கூறினார்.

**வேளாண்மை கல்லூரி மாணவிகளுக்கு ஊரக வேளாண்மை பணி அனுபவதிட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,03:44 IST

தூத்துக்குடி:மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இறுதியாண்டு பயிலும் வேளாண்மை மாணவிகளுக்கு ஊரக வேளாண்மை பணி அனுபவத்திட்ட முகாம் நடக்கிறது. கயத்தாறு வட்டாரத்திலுள்ள 12 கிராமங்களில் ஊரக வேளாண்மை பணித்திட்டத்தின் கீழ் மதுரை வேளாண்மை கல்லூரி மாணவர்கள் பயின்று வருகின்றனர். இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளிடமிருந்து நேரடியாக பயிற்சி பெறுவதோடு விவசாயிகளுக்கு உண்டாகும் பிரச்னைகளுக்கு தீர்வு கொடுக்க உள்ளனர். மேலும் நீர்வள

நிலவள மேம்பாட்டுத்திட்ட விஞ்ஞானிகள் ஆலோசனைப்படி செய்யப்பட்டு வருகின்றது. இப்பாடத்திட்டத்தில் வேளாண்மை மற்றும் ஆராய்ச்சி திட்டத்தின் முதல்வர் பைரவன், வேளாண்மை விரிவாக்க துணைத்தலைவர் சேகர், பாடத்திட்டத்தின் இணைப் பேராசிரியர்கள் புஷ்பா, மகேந்திரகுமார் ஆலோசனைப்படி ஒருமாத காலம் கிராமத்தில் தங்கி பயிற்சி பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் கீழ் வேளாண் மாணவிகள் செட்டிக்குறிச்சி கிராமத்தில் வாழையில் வாடல் நோய் தடுப்பது எப்படி என்பது பற்றி செயல்விளக்கம் மூலம் விளக்கினர்.

**விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,02:08 IST

உளுந்தூர்பேட்டை: மதியனூரில் அடிப் படை வசதிகள் செய்து தர வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். திருநாவலூர் அடுத்த மதியனூர் ஊராட்சி அலுவலகம் எதிரில்  தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் கோரிக்கை ஆர்ப் பாட்டம் நடந்தது. கிளை செயலாளர் செந்தில் தலைமை தாங்கினார். நிர்வாகிகள் காந்தி, நடராஜன், ராஜா முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், தலைவர் தாண்டவராயன், ஒன்றிய செயலாளர் குடியரசுமணி, மா.கம்யூ., ஒன் றிய செயலாளர் ஜெய் சங் கர் பேசினர். ஒன்றிய நிர் வாகிகள் ஜெயக்குமார், குமார், ஆறுமுகம் உட்பட பலர் கலந்துக் கொண்டனர். மதியனூர் கிராம ரேஷன்கடையை தினமும் திறந்து பொருட்கள் வழங்க வேண்டும். குடிநீர் பிரச்னையை தீர்க்க  வேண்டும். பழுதடைந்த மூன்று மினி டேங்க்குகளை சீரமைக்க வேண்டும். ஆதிதிராவிடர் துவக்கப் பள் ளிக்கு கழிப்பறை வசதி மற்றும் கூடுதல் ஆசிரியர் நியமனம் செய்யப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியு றுத்தி பலர் பேசினர்.

**தொடர் மழையால் மஞ்சளில் வேர், கிழங்கு அழுகல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,03:00 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி, டி.என்.பாளையம் மற்றும் பவானி சுற்று வட்டார பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழையால் பெரும்பாலான மஞ்சள் பயிர்களில் வேர் மற்றும் கிழங்கு அழுகல் நோய் ஏற்பட்டுள்ளது. இதனால் சாகுபடி குறையும் கவலையில்

விவசாயிகள் அதிர்ச்சியில் உள்ளனர்.தமிழகத்தில் நடப்பாண்டு வடகிழக்கு பருவமழை முன்கூட்டியே பெய்யத் துவங்கியுள்ளது. மேலும், வங்கக்கடலில் எழுந்துள்ள தாழ்வு நிலை காரணமாக மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் கோபி, சத்தி, பவானி தாலுகா பகுதிகளில் ஒரு வாரமாக நல்ல மழை பெய்தது. குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் மற்றும் வரட்டுப்பள்ளம் ஆகிய அணைகள் நிரம்பியுள்ளன. கிராம பஞ்சாயத்துகளில் உள்ள குளம், குட்டை மற்றும் ஏரிகளில் கணிசமாக தண்ணீர் உள்ளது.

கடுமையான விலை உயர்வால் ஈரோடு மாவட்டத்தில் நடப்பாண்டு அதிகளவில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் வட்டாரப் பகுதிகளில், நெல்லுக்கு இணையாக ஆயிரக்கணக்கான ஏக்கரில் மஞ்சள் சாகுபடி நடந்து வருகிறது. கோபி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் நெல், கரும்பு மற்றும் மஞ்சளை அடுத்து வாழை பயிரிடப்பட்டு வருகிறது. அதிக விலை கிடைப்பதால், பல ஆண்டுகளாக வாழை பயிரிட்ட நிலங்களில் விவசாயிகள் மஞ்சளை பயிரிடத் துவங்கினர். வேர் அழுகல் மற்றும் கிழங்கு அழுகல் நோய்களுக்கு இதுவும் ஒரு காரணமாகி விட்டது.

நெல் மற்றும் வாழை பயிரிட்ட நிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்க வேண்டும் என்பதால், சரியான வடிகால் இல்லாத நிலங்கள் கோபி வட்டாரத்தில் அதிகம் உண்டு. இதனால் மஞ்சள் பயிரிட்டுள்ள நெல் வயல்களில் வடிக்கால் வசதி இல்லாததாலும், மஞ்சள் பயிர்களில் நோய் தாக்கு அதிகரித்துள்ளது.நோய் தாக்கப்பட்ட மஞ்சள் செடிகளின் அடிப்பாகம் அழுகி காய்ந்து விடும். மஞ்சள் மகசூல் பெருமளவில் குறைந்து விடும் என்பதால் விவசாயிகள் சோகத்தில்  உள்ளனர்.

நோயை கட்டுப்படுத்தும் முறை குறித்து கோபி தோட்டக்கலை உதவி இயக்குநர் பொங்கியண்ணன் கூறியதாவது:மஞ்சள் பயிர்களில் ஏற்படும் நோய்களை எளிதாக மருந்துகள் மூலம் கட்டுப்படுத்த முடியும். மஞ்சள் நடவு செய்யும் போது, ஏக்கருக்கு இரண்டு கிலோ சூடோமோனால் மற்றும் இரண்டு கிலோ ட்ரைகோடெர்மா விரிடி தொழு உரத்துடன் கலந்து போட வேண்டும். மேலும் 2.5 கிராம் காப்பர் ஆக்ஸி குளோரைடு மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து வேரில் ஊற்றலாம்.வாழை சாகுபடி செய்யப்பட்ட நிலத்தில் ஒரு ஏக்கருக்கு 10 கிலோ கார்போ ப்யூரான் போடலாம். மஞ்சள் பயிரில்

ஏற்படும் நோயை உடனடியாக கண்டுபிடித்து மருந்து தெளித்தால், மகசூல் குறைய வாய்ப்பில்லை. மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலைப்பட தேவையில்லை.இவ்வாறு அவர் தெரிவித்தார்

**ஆடு வளர்ப்பு வாரியம் உறுப்பினராக வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,03:03 IST

கோபிசெட்டிபாளையம்: ""தமிழக ஆடு வளர்ப்பு நல வாரியத்தில் உறுப்பினராக சேர விரும்பும் விவசாயிகள் சம்பந்தப்பட்ட, கால்நடை மருத்துவமனை டாக்டர்களை அணுகலாம்," என கோபி கோட்ட கால்நடை துறை பராமரிப்பு உதவி இயக்குனர் கூறினார்.

அவர் கூறியதாவது:கோபி, நம்பியூர், டி.என்.பாளையம், பவானி, பவானிசாகர், அம்மாப்பேட்டை, தாளவாடி, சத்தி உள்ளிட்ட பஞ்சாயத்து யூனியன்களில் 62 ஆயிரம் கால்நடைகளுக்கு சப்பை நோய் தடுப்பு ஊசியும், 25 ஆயிரம் கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் தடுப்பு ஊசி என மொத்தமாக 87 ஆயிரம் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளது. வரும் மார்ச் மாதம் வரை 129 கால்நடை மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 53 முகாம் நடத்தப்பட்டு, குடற்புழு நீக்கம், மலடு நீக்கம் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டுள்ளது. மழைக்காலத்தில் ஏற்படும் நோயை தடுக்க, கோபி கோட்டத்தில் உள்ள ஒன்பது பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில், "அஸ்கார்டு' திட்டத்தின் கீழ் இரண்டு லட்சத்து 60 ஆயிரம் கால்நடைகளுக்கு, அடுத்த மாதம் கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்படும். பால் உற்பத்தியை அதிகரிக்க புரோட்டீன் நிறைந்த கலப்பு தீவன திட்டத்தின் கீழ் 30 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு, தீவனக்குழிகள் அமைக்க தலா 2,500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. மேலும், இத்திட்டத்தின் கீழ் 30 விவசாயிகள் இரண்டாம் கட்டமாக தேர்வு செய்யப்படுகின்றனர்.

தமிழக ஆடு வளர்ப்போர் நல வாரியத்தில் உறுப்பினராக சேர ஐந்து ஆடுகளை வைத்திருக்க வேண்டும். அவர்கள் சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவமனை டாக்டர்களை சந்தித்து உறுப்பினராக சேரலாம். கோபி கோட்டத்தில் உள்ள ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களில் இதுவரை 8,400 பேர் சேர்ந்துள்ளனர். குறைந்த பிரிமீயத்தில்

செயல்படுத்தப்படும் கால்நடைகள் இன்ஸ்சூரன்ஸ் திட்டத்தில் 3,500 பேரை சேர்க்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இதுவரை 360 பேர் சேர்ந்துள்ளனர்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**தேங்காய் பருப்பு விலை சரிகிறது**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,03:01 IST

கோபிசெட்டிபாளையம்: தேங்காய் பருப்புக்கு கடந்த மூன்று வாரங்களாக தொடர்ந்து விலை குறைந்து வருகிறது.தேங்காய் எண்ணெய்க்கு ஏற்பட்ட விலை உயர்வால், ஆலைகளில் உற்பத்தி அதிகரித்தது. தேங்காய் பருப்பு விலை கடந்த மாதம் ஒரு கிலோவுக்கு 50 ரூபாயை தாண்டியது. விவசாயிகளும் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்தனர்.

கோபி வட்டாரத்தில் 15 நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது. குளிர்ந்த சீதோஷ்ண நிலை உள்ளதால் தேங்காய் பருப்பை முழுமையாக காயவைக்க முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர். கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு ஏலத்துக்கு வரும் தேங்காய் பருப்பில், ஈரப்பதம் அதிகமாக இருப்பதால், குறைந்த விலையே கிடைக்கிறது. கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு கடந்த வாரம் 371 மூட்டைகள் தேங்காய் பருப்பு ஏலத்துக்கு வந்தது. நடப்பு வாரம் 409 மூட்டை வந்தது. அதிகபட்சமாக கிலோ 48.56 ரூபாய், குறைந்தபட்சமாக 46.75 ரூபாய், சராசரியாக 47 ரூபாய்க்கு விற்றது.கடந்த 22ம் தேதி 50.16 ரூபாய், 29ம் தேதி 49.77 ரூபாய்க்கு விற்றது. 6ம் தேதி மேலும் விலை குறைந்து 48.56 ரூபாய்க்கு விற்றது. தேங்காய் பருப்புக்கு தொடர்ந்து விலை குறைந்து வருவதால், விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

**பாதிக்கப்பட்ட தக்காளி விவசாயிகளுக்கு நஷ்டஈடு: ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்கல்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:06 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி ஜமீன்காளியாபுரத்தில், தரமில்லாத விதை காரணமாக பாதிக்கப்பட்ட தக்காளி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 3 ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு

வழங்கப்பட்டது. பொள்ளாச்சி அருகேயுள்ள ஜமீன் காளியாபுரத்தை சேர்ந்த விவசாயிகள், அக்ரோ சென்டர் கடைகளில் ஆந்திராவிலுள்ள கோல்டன் சீட்ஸ் என்ற நிறுவனத்தின் தக்காளி விதைகளை வாங்கி நடவு செய்தனர். நடவு செய்து 60 நாட்கள் ஆன நிலையில், செடிகளிலும் வழக்கம் போல் பூப்பூத்தநிலையில், தக்காளி காய்கள் பருமனடையமால் சிறுத்து காணப்பட்டது.

சுண்டக்காய் அளவுக்கு இருக்கும் தக்காளிக்காய் அப்படியே பழுத்து விடுகிறது. அவற்றை பறிக்காமல் விட்டால் உதிர்ந்தும் விடுகின்றன என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். சிறுத்திருக்கும் தக்காளி காய்கள் சிவந்ததும் அவற்றை பறித்து மார்க் கெட்டுக்கு கொண்டு சென்றால் வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர். இந்த ரக தக்காளியை கொள்முதல் செய்தால் மறுபடியும் விற்க முடியாது என்று கூறி திருப்பி அனுப்பி விடுகின்றனர். தக்காளி விதைப்பு, நடவு, உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகள் மேற்கொண்டதற்கு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் செலவாகி உள்ளது. தக்காளி விதைகள் தரமில் லாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர். விதை வாங்கியதற்கு பில் போன்ற ஆவணங்களை வைத்துள்ளோம். தக்காளி சாகுபடி செய்து ஏற்பட்ட இழப்பு தொகையை விதை நிறுவனம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இது குறித்து "தினமலரில்' அக்டோபர் 4ம் தேதி செய்தி வெளியானது. இதனையடுத்து, தோட்டக்கலை துறை மற்றும் விதை சான்று துறை அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட கோல்டன் சீடஸ் நிர்வாகிகள் நேரடியாக கள ஆய்வு செய்தனர். ஆய்வில், தரமில்லாத விதை காரணமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளதும், 50 சதவீதம் வரை பாதிப்புகள் ஏற்பட்டுள்ளதும் தெரியவந்தது. இதனையடுத்து உரிய இழப்பீடுகள் வழங்கப்படும் என அதிகாரிகள் உறுதியளித்தனர். இதன் அடிப்படையில், கோல்டன் சீட்ஸ் விதை வாங்கி பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா 3 ஆயிரம் வீதம் நஷ்ட ஈடாக விதை நிறுவனம் சார்பில் வழங்கப் பட்டது. விவசாயிகள் தரப்பில், விதைப்பு முதல் அறுவடை வரை ஏக்கருக்கு 35 ஆயிரம் செலவாகிறது என கூறப்பட்டது. விதை நிறுவனம் தரப்பில், தக்காளி சாகுபடிக்கு ஏக்கருக்கு இதுவரை 13 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. அதிக பட்சமாக 50 சதவீதம் வரை மட்டுமே இழப்பு ஏற்பட்டுள்ளது. மற்ற செடிகளில் தரமான காய்கள் பிடித்துள்ளது. விதையை நம்பி பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத்தை நிர்வாகம் ஏற்றுக் கொள்ளும். முதலீட்டில் மூன்றில் ஒரு பங்கு நஷ்ட ஈடாக வழங்கப்படும் என தெரிவித்தனர்.இதனையடுத்து, கோல்டன் சீட்ஸ் தக்காளி விதை வாங்கி 100 ஏக்கர் வரை

பயிரிட்டு, பாதிக்கப்பட்ட 20 விவசாயிகளுக்கு ஏக்கருக்கு தலா 3 ஆயிரம் வீதம் நஷ்ட ஈடு தொகையை கம்பெனி நிர்வாகிகள் நேரடியாக விவசாயிகளுக்கு வழங்கினர்.

**அதிசய "ராட்சத காளான்கள்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:00 IST



சேலம்: செங்குட்டை கிராமத்தில், செல்லமுத்து என்பவரின் தென்னந்தோப்பில் பருவமழை காலத்தில், மூன்று கிலோ எடையுள்ள நான்கு ராட்சத காளான்கள் ஒவ்வொரு ஆண்டும் வளர்கின்றன. "கடந்த எட்டு ஆண்டுகளாக, பருவமழையின் போது வளரும் 3 கிலோ எடையுள்ள நான்கு காளான்களை பறித்து சமைத்து, சாப்பிடுகிறோம்' என்கிறார் செல்லமுத்து. "மக்கி போன இலை, தழைகள் அதிகமாக தேங்கும் இடங்களில் அபூர்வமாக 5 கிலோ எடையுள்ள காளான்கள் மழைக்காலத்தில் வளரும். வெள்ளை நிறத்தில் காணப்படும் காளான்களை உண்ணலாம். வெள்ளை காளான்களின் மேல் பூஞ்சை இருந்தால் சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும். மஞ்சள், கறுஞ்சிவப்பு நிறத்தில் காணப்படும் காளான்கள் விஷத்தன்மை கொண்டவை. அவற்றை சாப்பிடக் கூடாது' என்கிறார் மேட்டூர் சித்தா மூலிகை தோட்டத்தை சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சி அலுவலர் சொர்ண சுப்ரமணியம்.

**ஈரப்பதம் காக்கும் தென்னை "நார் கழிவு'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:00 IST



ஈரோடு: பவானி பகுதிகளில் நெல் சாகுபடி அதிகம். இங்குள்ள விவசாயிகள் நாற்றங்காலில் எப்போதும் ஈரப்பதம் இருக்க, அவற்றில் தென்னை நார் கழிவு தூவுகின்றனர். இம்முறையை பின்பற்றுவதால் நாற்றங்காலுக்கு தினசரி நீர் பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை. வாரத்திற்கு ஒரு முறை நீர் பாய்ச்சினாலே போதும். மழை பெய்தாலும் தண்ணீர் கீழே இறங்காமல் தென்னை நார்கழிவுகள் நீரை ஈர்த்துக் கொள்கின்றன. இதனால் நீர் சிக்கனமாகிறது. தென்னை நார் கழிவுகள் ஈரத்தன்மையுடன் இருப்பதால், தேவையான நீர் எப்போதும் கிடைத்து, நாற்றுகள் செழிப்பாக வளர்கின்றன. வேர்களும் அதிகமாக உருவாகின்றன. இதனால், நெல் <உற்பத்தி அதிகரிக்கிறது. அதிக பலன் தரும் இந்த புதுமுறை பாசனத்தை பல  விவசாயிகள் பின்பற்ற துவங்கியுள்ளனர்.

**பிரமிப்பூட்டும் "பிரம்ம கமலம்'**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:00 IST



திண்டுக்கல்: பிரம்ம கமலம் தெய்வீக மலராக கருதப்படுகிறது. கொடி வகையை சேர்ந்த இது. மரங்களிலும், பாறை இடுக்குகளிலும் வளரக்கூடியது. இயற்கை உரங்களை பயன்படுத்தி வீடுகளிலும், தோட்டங்களிலும் இதை எளிதாக பயிர் செய்யலாம். விரைவாக வளரும் இயல்புடையது. இளவேனில் காலத்தில் பூக்க தொடங்கும். பிரம்ம கமலப் பூ ஒரு இரவில் பூத்து வாடிவிடும் இயல்புடையது. பழநி அஞ்சுகத்தம்மாள் தெருவை சேர்ந்தவர் ஆறுமுகம். இவர், அபூர்வ வகையை சேர்ந்த பிரம்ம கமலம் கொடியை வளர்த்து வருகிறார். இதில், பிரம்ம கமலம் மலர்கள் பூக்கத் தொடங்கி உள்ளன. முதலில் மூன்று மலர்கள் மட்டுமே பூத்து பின்னர், ஐந்து மலர்கள் பூத்தன. இம்மலர்கள், இரவு 11 மணிக்கு பூத்து அதிகாலை 3 மணிக்குள் வாடிவிடும் இயல்புடையவை. பிரம்ம கமலம் கொடியை பிரம்மனின் நாடிக் கொடி என்றும் அழைப்பர்.

**இனிக்கிறது "திராட்சை' சாகுபடி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 08,2010,00:00 IST



கோவை: தொண்டாமுத்தூர் அருகே ஆறுமுகக்கவுண்டனூர், தீத்திபாளையம், மாதம்பட்டி, காரமடை உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் திராட்சை பயிரிடப்படுகிறது. குறைந்த அளவு மழை, நல்ல வெயில் என்ற சீதோஷ்ண நிலையில் திராட்சைகள் செழித்து வளரும். மழை அதிகமாக பெய்தால் நஷ்டம் தான் ஏற்படும். இந்த ஆண்டு எதிர்பார்த்த அளவு பருவமழை பெய்யவில்லை. வெயில் காய்ந்தது. இதனால்

திராட்சை விளைச்சல் நன்றாக இருந்ததுடன் விலையும் கிடைத்துள்ளது. மார்க்கெட்டிற்கு வழக்கமாக செல்லும் பழங்களை காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலாக உள்ளது. தினசரி 25 முதல் 35 டன் வரை கோவை நகரத்திற்கும், கேரளா பகுதிகளுக்கும் திராட்சை அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு கிலோ திராட்சை 38 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. எதிர்பார்த்த விலைக்கு மேல் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியாக <உள்ளனர்

**தினத் தந்தி**

***ரபி பருவத்தில் ரூ.420 அதிகரிக்கப்படட வாய்ப்பு பருப்பு கொள்முதல் விலையை உயர்த்த மத்திய அரசு பரிசீலனை***



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*ரபி பருவத்தில் (அக்டோபர் – மார்ச்) கோதுமை மற்றும் பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை (கொள்முதல் விலை) அதிகரிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது. பருப்பு வகைகளுக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.420 உயர்த்தப்படட வாய்ப்புள்ளது. கோதுமையை பொறுத்தவரை, கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ.20 அதிகரிக்கப்படலாம். இதன்படி ஒரு*

குவிண்டால் கோதுமைக்கான கொள்முதல் விலை ரூ.1,120–ஆக இருக்கும்.

பாசிப்பருப்பு

பாசிப்பருப்பு கொள்முதல் விலை தற்போதைய ரூ.1,830 என்ற அளவிலிருந்து ரூ.2,250–ஆக உயர்த்தப்படலாம். இது, பாசிப்பயறுக்கு ரூ.1,760–லிருந்து ரூ.2,100–ஆக அதிகரிக்கப்பட வாய்ப்புள்ளது. ஒரு குவிண்டால் கடுகின் கொள்முதல் விலை ரூ.20 உயர்த்தப்பட்டு ரூ.1,850–ஆக உயரக்கூடும் என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. நடப்பு 2010–11 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) பருப்பு வகைகள் உற்பத்தியை 20 லட்சம் டன் அதிகரிக்க இலக்கு நிர்ணயம் செய்துள்ளது. இதனையடுத்து, ஒட்டுமொத்த அளவில் 1.65 கோடி டன் பருப்பு உற்பத்தி செய்யும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கரீஃப் பருவத்திற்கான (ஜூன் – அக்டோபர்), பருப்பு வகைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டதையடுத்து நாட்டில் பருப்பு பயிரிடும் பரப்பளவு கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் கரீஃப் பருவ பருப்பு உற்பத்தி 60 லட்சம் டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 43 லட்சம் டன்னாக இருந்தது.

இந்தியா முன்னிலை

பருப்பு வகைகள் உற்பத்தியில் இந்தியா முன்னிலை வகித்து வருகிறது. நம் நாட்டில் ஆண்டுக்கு 1.90 கோடி டன் பருப்பு தேவைப்படுகிறது. எனினும் இதனை ஈடு செய்யும் வகையில் உற்பத்தி இல்லை. நம் நாடு ஆண்டுதோறும் 30–40 லட்சம் டன் பருப்பு வகைகளை இறக்குமதி செய்து வருகிறது.

நடப்பு நிதி ஆண்டில், நம் நாட்டில் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 8 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நடப்பு ஆண்டில் இதுவரை பயிரிடும் பரப்பளவு சுமார் 20 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது. 2010 செப்டம்பர் 9–ந் தேதி நிலவரப்படி நம் நாட்டில் ஏறக்குறைய 1.10 கோடி ஹெக்டேர் நிலப்பரப்பில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சென்ற நிதி ஆண்டில் நம் நாட்டில் சுமார் 1.48 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தியாகியுள்ளது. இது, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 லட்சம் டன் அதிகமாகும்.

**உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 16.24%–ஆக குறைந்தது**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம், செப்டம்பர் 25–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.24 சதவீதமாக சற்று குறைந்துள்ளது. இது, செப்டம்பர் 18–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 16.44 சதவீதமாக இருந்தது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், குறிப்பிட்ட உணவு பொருள்களின் விலை குறைந்து இருந்தது. இருப்பினும், தானியங்கள், பழங்கள், காய்கறிகள், பால் போன்றவற்றின் விலை அதிகரித்து இருந்தது.

ஜூலை மாதத்தில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் சற்று குறைவாக இருந்தது. ஆனால், பல மாநிலங்களில் கனமழை காரணமாக போக்குவரத்தில் பாதிப்பு ஏற்பட்டதால், ஆகஸ்டு மாதத்தில் பணவீக்க விகிதம் சற்று அதிகரித்திருந்தது.

செப்டம்பர் 25–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், பருப்பு வகைகள் (4.4%), கோதுமை (6.49%), அரிசி (3.86%) ஆகியவற்றின் விலை உயர்ந்திருந்தது. மேலும், சென்ற ஆண்டின் இதே வாரத்துடன் ஒப்பிடும்போது பால் (24.88%), பழங்கள் (15.65%), காய்கறிகள் (7.65%) மற்றும் வெங்காயம் (9.85%) விலை மிகவும் அதிகரித்திருந்தது. இதே காலத்தில், உருளைக்கிழங்கின் விலை 50.81 சதவீதம் குறைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**காயம்பேடு மார்க்கெட்டில் 10 கிராம் எடையே உள்ள சிறிய கோஸ்– டெல்லி பாகற்காய்க்கு கிராக்கி**



வழக்கமாக நாம் பயன்படுத்தும் பெரிய கோஸ் அருகே 10 கிராம் எடையே உள்ள சிறிய கோஸ் உள்ளதை படத்தில் காணலாம்.



கோயம்பேடு மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக வந்துள்ள டெல்லி பாகற்காய்.

சென்னை, அக்.8–

கோயம்பேடு மார்க்கெட்டில் 10 கிராம் எடையே உள்ள சிறிய ஊட்டி கோஸ்–டெல்லி பாகற்காய்க்கு கிராக்கி அதிகரித்துள்ளது.

டெல்லி பாகற்காய்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கத்தரிக்காய், வெண்டைக்காய், கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளைத்தான் பொதுமக்கள் விரும்பி வாங்குவதை பார்த்திருக்கிறோம். ஆனால் சமீப காலமாக 10 கிராம் எடையே உள்ள ஊட்டி கோஸ் மற்றும் டெல்லி பாகற்காய்க்கு கிராக்கி அதிகரித்துள்ளது.

கோயம்பேடு மார்க்கெட்டுக்கு டெல்லி, கொல்கத்தா ஆகிய பகுதிகளில் இருந்து டெல்லி பாகற்காய் அதிகமாக வருகிறது. இந்த பாகற்காய்க்கு தமிழ்நாட்டில் விளையும் சிறிய மற்றும் பெரிய பாகற்காய் போல கசப்பு தன்மை அதிகம் கிடையாது. இருந்தாலும் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் தன்மை இருப்பதாக வியாபாரி ஒருவர் கூறினார். ஒரு கிலோ டெல்லி பாகற்காய் ரூ.30 வரை விற்பனையாகிறது. தற்போது கோயம்பேடு மார்க்கெட்டுக்கு சிறிய பாகற்காய் வரத்து அதிகமாக இல்லை. எனவே டெல்லி பாகற்காயை பொதுமக்கள் விரும்பி வாங்கிச்செல்கிறார்கள்.

10 கிராம் எடை உள்ள கோஸ்

இதே போல ஊட்டியில் இருந்து நெல்லிக்காய் அளவே உள்ள சிறிய கோஸ் வரத்தும் அதிகரித்துள்ளது. இதை வியாபாரிகள் ‘கிளை கோஸ்’ என்று அழைக்கிறார்கள். இந்த

*கோஸ் எடை 10 கிராம் முதல் 15 கிராம் வரையே உள்ளது.*

*இதன் கூட்டு பொறியல் மிகவும் ருசியாக இருக்கும். இதனால் இந்த வகையான கோசை பொதுமக்கள் விரும்பி வாங்குகிறார்கள். இது மட்டும் அல்லாமல் ஸ்டார் ஓட்டல்களுக்கும் அதிகமாக வாங்கிச்செல்கிறார்கள்.*

*வழக்கமான பெரிய கோஸ் ஒரு கிலோ ரூ.10–க்கு விற்பனையாகிறது. ஆனால் சிறிய வகையான கிளை கோஸ் ஒரு கிலோ ரூ.80 வரை விற்பனையாகிறது.*

*கேரட்–பீன்ஸ் விலை உயர்வு*

*கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் போன்ற காய்கறிகள் விலை குறைந்தாலும் கேரட், பீன்ஸ் விலை குறையவில்லை. ஒரு கிலோ பீன்ஸ் ரூ.30–க்கும், ஒரு கிலோ கேரட் 25–க்கும் விற்பனையாகிறது. பெரிய வெங்காயம் கிலோ ரூ.25–க்கும், முருங்கைக்காய் கிலோ 40–க்கும், நாட்டுத்தக்காளி கிலோ ரூ.10–க்கும், நவீன் தக்காளி கிலோ ரூ.16–க்கும், வெண்டைக்காய் கிலோ ரூ.20–க்கும், பாகற்காய் கிலோ ரூ.18–க்கும் நேற்று விற்பனையானது என்று கோயம்பேடு வியாபாரி ஜெயபிரகாஷ் தெரிவித்தார். சில்லரை கடைகளில் அவர்கள் விருப்பம் போல கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகிறார்கள்.*

*தமிழ்நாட்டில் இருந்து வட மாநிலங்களுக்கு அதிக அளவில் ஏற்றுமதியாவதால் ஒரு தேங்காய் ரூ.10 முதல் ரூ.15 வரை உயர்ந்துள்ளது.*

**பருப்பு, கோதுமை கொள்முதல் விலை உயர்வு**

புதுடெல்லி, அக். 6-

பருப்பு மற்றும் கோதுமைக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

பருப்பு விலை குவிண்டாலுக்கு (100 கிலோ) 420 உயர்த்தப்பட்டுள்ளது. அதேசமயம் கோதுமை விலை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி சீசனில் கோதுமைக்கான கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டு 1,120-க்கு

கொள்முதல் செய்யப்படும். இதேபோல பருப்பு விலை குவிண்டாலுக்கு 420 உயர்த்தப்பட்டு 2,250-க்கு கொள்முதல் செய்யப்படும்.

கடுகு விதை குவிண்டாலுக்கு 20 உயர்த்தப்பட்டு 1,850-க்கு கொள்முதல் செய்யப்படும். குறுவை சாகுபடி பயிர் கொள்முதல் விலை உயர்வு குறித்து பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவை முன் ஒப்புதலுக்கு இந்த வாரத்தில் வைக்கப்படும்.

2010-11-ம் ஆண்டில் பருப்பு உற்பத்தியை 20 லட்சம் டன்னாக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. கடந்த ஆண்டு பருப்பு உற்பத்தி 16.5 லட்சம் டன்னாக இருந்தது. இந்த இலக்கை எட்டுவதற்காக சம்பா பருவத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டது. இதேபோல குறுவை சீசனிலும் ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது. சம்பா பருவத்தில் கொள்முதல் விலை உயர்த்தப்பட்டதால் பருப்பு உற்பத்தி அதிகரித்தது. முந்தைய ஆண்டு இதே சீசனில் 4.3 லட்சம் டன்னாக இருந்த பருப்பு உற்பத்தி கடந்த சம்பா பருவத்தில் 6 லட்சம் டன்னாக உயர்ந்தது.

உலகிலேயே மிக அதிக அளவில் பருப்பு உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. ஆண்டுதோறும் 40 லட்சம் டன் பருப்பு இறக்குமதி செய்யப்படுகிறது. உள்நாட்டு தேவையை ஈடுகட்டவும், விலை உயர்வைத் தடுக்கவும் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.உணவுப் பணவீக்கம் தொடர்ந்து உயர்ந்து வருவதால் கோதுமைக்கான ஆதரவு விலை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. வேளாண் பொருள் விலை நிர்ணயக் குழு பரிந்துரை அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டுள்ளது.

தினபூமி

## களைக்கொல்லி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு - விவசாயிகள் புகார்

ராமநாதபுரம், அக். 8

திருவாடானை தாலுகாவில் களைக்கொல்லி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக.... விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகா தமிழகத்தின் 2 வது நெற்களஞ்சியம் என பெயர் பெற்றது. தற்போது விவசாய பணிகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில் களைக்கொல்லி மருந்துக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வேளாண் அதிகாரிகளும் இது குறித்து விவசாயிகளிடம் ஆலோசனை வழங்குவது இல்லை என்று புகார் தெரிவித்துள்ளனர். மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

## உரங்களை கூடுதல் விலைக்கு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை

சிவகங்கை ,அக். 8

உரங்களை கூடுதல் விலைக்கு விறபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்..... என்று பேளாண் இணை இயக்குனர் எச்சரிக்கை இது குறித்து சிவகங்கை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தங்காசமி பாண்டியன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பெய்த மழையை பயன்படுத்தி வேளாண் பணிகள் நடைபெற்றுவருகிறது. உரக்கடை விற்பனையாளர்கள் அரசு நிர்ணயம் செய்த விளையில் விவசாயிகளுக்கு உரங்களை இருப்பில் வைத்துக்கொண்டே விவசாயிகளுக்கு இல்லை என்று கூறக்கூடாது. அனைத்து உரக்கடைகளிலும் தேவையான அளவு உரங்களை இருப்பு வைக்க வேண்டும். விவசாயிகளுக்கு பெயரில் சிலர் உரங்களை மொத்தமாக பெற்று வெளி சந்தைகளில் கூடுதல் விலைக்கு விற்க முயல்வதாக தகவல் கிடத்துள்ளது. அவ்வாறு செய்பவர்கள் மீது, உரக்கட்டுப்பாட்டு ஆணை 1985-ன் படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் விவசாயிகள் என்று கூறி உரங்களை மொத்தமாக பெறவருபவர்கள் குறித்த விவரங்களை உடனடியாக அருகில் உள்ள வேளாண்மை அதிகாரிகளுக்கு தெரிவிக்கும்படி உரக்கடை விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது. எந்தவித புகாருக்கும் இடம் இல்லாமல் உரங்களை தட்டுபாடின்றி அரசு நிர்ணய விலையில் வழங்கவேண்டும் என்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள அனைத்து உரவிற்பனையாளர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்று அவர் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.